**சப்போட்டா:**

**1. மொட்டுப்புழு, அனார்சியா இபோடியாஸ்:**

**சேதத்தின் அறிகுறி:**

- பூக்களும் மொட்டுகளும் உதிர்ந்து கிடக்கும்
- தாக்கப்பட்ட பூக்களில் துளைகளும் புழுக்களின் கழிவுகளும் காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- புழு சிறியதாகவும் இளஞ்சிவப்பு பழுப்பு நிறத்திலும் கருந்தலையை கொண்டும் காணப்படும்
- அந்துப்பூச்சி - சாம்பல் நிறமாகவும் அதன் இறக்கையில் கரும் திட்டுகளாக காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- பாசலோன் 35 இ.சி 2 மிலி / லிட்டர்

  (அ)

  பாஸ்பாமிடான் 40 எஸ்.எல. 2 மிலி / லிட்டர்

  (அ)

  என்டோசல்பான் 35 இ.சி 2 மிலி / லிட்டர்

- வேப்பம் எண்ணெய் 2 சதவிதம்

  (அ)

  வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம்

2. பழ ஈ, பாக்ட்ரோசீரா டார்சாலிஸ்:

**சேதத்தின் அறிகுறி:**

- புழு பாதி பழுத்த பழங்களை தாக்கி, மரத்திலிருந்து பழங்களை விழச்செய்யும்
- தாக்கிய பழங்களில் நீர் வடியும்
- பழத்தின் மேற்பகுதியில் பழுப்பு நிறத்தில் அழகிய திட்டுகள் காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- புழு கால் களற்று மஞ்சள் நிறமாக காணப்படும்
- தாய்ப்பூச்சி பழுப்பு நிற கண்ணாடி போன்ற இறக்கைகளுடன் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- பாதிக்கப்பட்ட பழங்களை பறித்து அகற்றி விட வேண்டும்
- மரத்தைச் சுற்றி உழவு செய்து பழ ஈயின் கூட்டுப்புழுக்களை அழிக்கலாம்
- மெத்தில் யூஜீனால் கவர்ச்சிப் பொறியை ஹெக்டேர்க்கு பத்து வீதம் வைத்து பழ ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்
- பைரித்ரம் அல்லது பி.எச்.சியை தண்ணீருடன் கலந்து தெளிக்கவும்
- பென்தியான் 2 மிலி (அ) மாலத்தியான் 2 மிலி மருந்தை 1 லி தண்ணீருடன் கலந்து தெளித்தால் பழ ஈக்களை கட்டுப்படுத்தலாம்

- ஒப்பியஸ் காட்பன்சேட்டஸ் மற்றும் ஸ்பாலஞ்சியா பிலிப்பைன்ஸ் போன்ற புழு ஒட்டுண்ணிகளைப் பயன்படுத்தி புழு ஈக்களின் தாக்குதலை தடுக்கலாம்

**3. தண்டு துளைப்பான் (புளேக்கேடரஸ் பெருஜினஸ்):**

**சேதத்தின் அறிகுறி:**

- மரத்தின் கழுத்துப்பட்டை பகுதியில் சிறுசிறு துளைகள் தோன்றும்
- மரத்திலிருந்து தேன் போன்ற திரவம் வடிவதை காணலாம்
- மரத்தின் கழுத்துப்பட்டை பகுதியில் உள்ள சிறு துவாரங்களில் இருந்து புழுக்களின் கழிவுகள் வெளியேதள்ளப்பட்டிருக்கும்
- இலைகள் மஞ்சள் நிறமாக மாறி உதிர்ந்துவிடும்
- மரக்கிளையின் குச்சிகள் காய்ந்து படிப்படியாக மரம் முழுவதும் காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- தாய்ப்பூச்சி நடத்தர அளவிலும் பழுப்பு கலந்த சிவப்பு நிறத்திலும் காணப்படும்
- தலை மற்றும் கழுத்துப் பகுதி கரும் பழுப்பு நிறத்தில் அல்லது கருப்பு நிறத்திலும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட பகுதிகளையும் காய்ந்த கிளைகளையும் நீக்கி அழித்தவிட வேண்டும்

- நிலத்தை சுத்தமாக வைக்க வேண்டும்
- தார் மற்றும் மண்ணெண்ணையை 1:2 என்ற கலவையில் தாக்கப்பட்ட பகுதியில் பூசவேண்டும்
- மரத்தின் அடிப்பகுதியிலிருந்து 3 அடி உயரத்தில் கார்பரில் 50 டயில்யூபி 20 கிராம் மருந்தினை எடுத்து தாக்கப்பட்ட இடத்தில் பூச வேண்டும். பின்னர் மரப்பட்டையை சுரண்டிவிட்டால் வண்டுகள் முட்டையிடுவதை தவிர்க்கலாம்
- வண்டு சேதப்படுத்திய துளையிலிருந்து புழுவை அகற்றி பின்பு மோனோகுரோட்டோபாஸ் 10 லிருந்து 20 மிலி வரை எடுத்து பாதிக்கப்பட்ட துளையினுள் செலுத்த வேண்டும் (அ) கார்போபியூரான் குருணை மருந்தை ஒரு துளைக்கு 5 கிலோ வீதம் செலுத்திய பின்பு களிமண் வைத்து துளையை அடைத்து விட வேண்டும்
- தாக்கப்பட்ட துளையினுள் ஒரு செல்பாஸ் வில்லையை போட வேண்டும்
- அடிமரத்தில் தலைகீழ் ‘ப’ வடிவில் 2.5 செ.மீ படடையைப் பிரித்து 10 மிலி மானோகுரோட்டோபாஸ் மருந்தை பஞ்சுவிட்டு வைத்து பட்டையை மூடி களிமண் கட்டுப்போடலாம்

**4. இலைப்பிணைக்கும் புழு (அ) சிக்கூ அந்துப்பூச்சி (நெப்போடரிக்ஷி யூக்ராஃபில்லா):**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகள் மெல்லிய நூலாம்பட்டையால் பிணைக்கப்பட்டு சுரண்டி தின்னப்பட்டிருக்கும்
- இலைகள் காய்ந்தும் பிணைக்கப்பட்ட தண்டுகளில் காய்ந்த இலைகள் தொங்கிக் கொண்டு இருக்கும்
- புழுக்கள் பூமொட்டுக்களுக்குள் துளையிட்டு பூக்களை உதிரச் செய்யும்

**பூச்சியின் விபரம்:**

- முட்டை - மஞ்சள் நிறமாகவும் நீள்வட்ட வடிவிலும் காணப்படும்
- புழுக்கள் மங்களான சிவப்பு நிறத்தில் பக்கவாட்டில் கோடுகளுடன் இருக்கும்
- அந்துப்பூச்சி சாம்பல் நிறமாக கரும்புள்ளிகளுடன் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட பழங்களை பிடுங்கி தோட்டத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்
- சேதமடைந்த (அ) தாக்கப்பட்ட கிளைகளை அகற்றிவிட வேண்டும்
- பாசலோன் 35 இ.சி 2 மிலி / லிட்டர்

  (அ)

  பாஸ்பாமிடான் 40 எஸ்.எல. 2 மிலி / லிட்டர்

  (அ)

வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம்

**5. கம்பளிப்புழு (மெட்டனாஸ்டிரியா ஹிர்டாகா):**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் இலைகளை உண்ணும்
- இலையுதிரல் காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- புழுக்கள் சாம்பல் கலந்த பழுப்பு நிறத்தில் நீண்ட உரோமங்களுடன் கரும்புள்ளிகளுடன் காணப்படும்
- பெண் பூச்சி பருமனாக சாம்பல் கலந்த பழுப்பு நிற இறக்கைகளுடன் காணப்படும்
- முன் இறக்கையின் கருப்புத்திட்டில் ஒரு வெள்ளைப் புள்ளி இருக்கும்
- பின் இறக்கைகள் வெள்ளை நிறத்தில் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- களத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்
- முட்டை குவியலை எடுத்து அழிக்க வேண்டும்
- மரத்தின் கழுத்துப்பகுதியில் கூட்டமாக தோன்றும் புழுக்களை தீயை மூட்டி அழிக்க வேண்டும்
- குளோர்பைரிபாஸ் 20 இ.சி

(அ)

என்டோசல்பான்

(அ)

பாசலோன் 2 மி.லி / லிட்டர்

(அ)

சைபர்மெத்தரின் 0.025 சதவிதம்

- கார்பரில் 10டி பவுடரை கிளைகள் மீது போடலாம்
- சால்சிடிட் குழவி, பிரக்கைமெரியா வகை தாக்கப்பட்ட தோட்டத்தில் விடலாம்

**6. மாவுப்பூச்சி, பொரீசியா விர்கேட்டா:**

**சேதத்தின் அறிகுறி:**

- இலை மற்றும் காய்களின் மீது அடை அடையாக மாவு போன்று காணப்படும்
- முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- பெண் பூச்சியின் பிற்பகுதியில் நீண்டவால் போன்று காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- முட்டை குவியலையும் குழுக்களையும் எடுத்து அழிக்க வேண்டும்
- கூட்டமாக காணப்படும் புழுக்களை தீயிட்டு அழிக்க வேண்டும்
- விளக்குப் பொறி வைத்து கவர்ந்து அழிக்கலாம்
- மெதில் டெமட்டான் 25 இ.சி 0.05 சதவிதம்

(அ)

டைமீதோயேட் 30 இ.சி. 0.06

- மரத்திற்கு 20 என்ற விகிதத்தில் கிர்ப்டோலேமஸ் மான்ட்ரொஸரி பொறிவண்டை விடலாம்

**7. பச்சை செதிள் பூச்சி காக்கஸ் விரிடிஸ்:**

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும் தாய்ப்பூச்சிகளும் இலைகளின் சாறுகளை உறிஞ்சும்
- இலைகள் மஞ்சலாக மாறும்

**பூச்சியின் விபரம்:**

- குஞ்சுகள் இளம் மஞ்சள் நிறத்தில் காணப்படும்
- பூச்சிகள் தட்டையாகவும் மேற்பாகம் லேசாக குவிந்து மஞ்சள் கலந்த பச்சை நிறமாக இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்குதல் ஆரம்பிக்கும் பருவத்திலேயே கிளைகளை வெட்டி அழித்துவிட வேண்டும்
- மானோகுரோட்டோபாஸ் 1 மி.லி / லிட்டர்

  (அ)

  - பென்தோயேட் 1 மி.லி / லிட்டர்
- இரண்டு வாரங்கள் கழித்து மரத்திற்கு 20 என்ற விகிதத்தில் கிர்டோலேமஸ் மான்ட்ரொஸரி பொரிவண்டை விடலாம்

- பாஸ்போமிடான் 215 மிலி (அ) மானோகுரோட்டோபாஸ் 40 மிலி (அ) எண்டோசல்பான் 80 மிலி மருந்து தண்ணீருடன் கலந்து தெளித்தால் நாற்றங்காலில் செதில் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்
- நடவு வயலில் - பாஸ்போமிடான் 300 மிலி மானோகுரோட்டோபாஸ் 30 மிலி மருந்தைத் தெளிக்கவும்

**14. கருப்பு பூச்சி ஸ்கோட்டினோபோரா லூரிடா:**

**தாக்குதலின் அறிகுறிகள்:**

- பாதிக்கப்பட்ட கதிர்கள் சிகப்பு கலந்த பழுப்பு நிறத்திலிருக்கும்
- நுனிக்குருத்து அழுகிவிடும், வளர்ச்சிக்குன்றி காணப்படும்
- வெண்கதிர் உருவாகும்

**பூச்சியின் அடையாளம்:**

- குஞ்சுகள் - பழுப்பு நிறத்திலும் உடற்பகுதிக்கு கீழே மஞ்சள் கலந்து பச்சை நிறத்திலும், 3 நீட்சிகள் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- வயல்களில் களை மற்றும் புற்களை அகற்றி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்
- தேவைக்கு அதிகமான தண்ணீரை வயல்கள் வடிய விட வேண்டும்
- விளக்கு பொறி அமைத்து பூச்சியை கவர்ந்து அழிக்கலாம்

- ஸ்பைடர், காக்ஸிநெலிட், போன்ற இயற்கை எதிரிகளை பயன்படுத்தி பூச்சியை அழிக்கலாம் மானோகுரோட்டோபாஸ் 1000மிலி (அ) அசப்பேட் 6259 (அ) வேப்பங்கொட்டை சாறு 5 சதம் தெளித்து பூச்சியின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தலாம்